VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine)
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020
1-7th (1st Week) Every Month




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829
78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரீக்கல்ஸ்
7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To | Printed Matter

If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

| மலர்:4 | இதழ்:1 | அக்டோபர்:2019 | ரூ.10/– | வருட சந்தா:ரூ.100/– |
|---|---|---|---|---|
| Volume:4 | Issue:1 | October:2019 | Rs.10/- | Annual Subs: Rs.100/- |



SHRI MAHA MERU MANDALI TRUST
Reg. No. DIT (E) No.2 (651) / 12-13 / Sl. No. 90 / 13-14

Shri G.S. Venkataraman
Author

Shri S. Suga, Smt. B. Indira Balaji, Shri. R.V. Sathyanarayana,
Shri. J. Sathish, Sow. G.V. Mahasree Neela
Trustees

Shri N. Subramaniam
Managing Trustee

பேரன்புடையீர்,

ஸ்ரீ ஹயக்கிரீவர், ஸ்ரீ தத்தாத்ரேயர், ஸ்ரீ ஸதாஶிவ ப்ரஹ்மேந்திராள், ஸ்ரீ ஸ்வயம்ப்ரகாஶ அவதூத ஸ்வாமிகள், ஸ்ரீ க்ருஷ்ணானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், சேந்தமங்கலம் மன்மலை அருணாஸ்ரமம் ஸ்ரீ அபயானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பரிபூர்ண பரமானந்த அனுக்ரஹ ஆசிகளாலும், ஸ்ரீ குஹானந்தநாத ஸ்வாமிகள், ஸ்ரீ சிதானந்தநாத ஸ்வாமிகள், ஸ்ரீ பாலானந்தநாத ஸ்வாமிகள் பரிபூர்ண பரமானந்த அனுக்ரஹ ஆசிகளாலும்,

**ஸ்ரீ பரிபூர்ணாம்பா ஸமேத ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகானந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்**

**முன்னிலையில்**

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் விகாரி வருஷம் புரட்டாசி மாதம் 12ந் தேதி (29.09.2019) ஆஸ்வீஜ ஶுத்த ப்ரதமை ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 21ந் தேதி (08.10.2019) செவ்வாய்க்கிழமை விஜய தஶமி வரை நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டபடி நவராத்திரி பூஜைகள், மேற்கண்ட முகவரியில் இயங்கி வரும் ஸ்ரீ மஹா மேரு மண்டலியில் நடைபெற உள்ளன.

தாங்கள் தங்கள் சுற்றத்தார் மற்றும் நண்பர்களுடன் வந்திருந்து, பூஜைகளில் தினம் கலந்து கொண்டு, எல்லாம் வல்ல ஸ்ரீ நவராத்ரி நாயகி ஸ்ரீ சண்டிகா பரமேஶ்வரி, ஸ்ரீ லலிதா மஹா திரிபுரஸுந்தரி பராபட்டாரிகாவின் பேரருளால் எல்லா வளங்களையும் பெற்று நோயற்ற பெருவாழ்வு பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**பூர்ணானந்தா**
(N. சுப்ரமண்யம்)
நிர்வாக அறங்காவலர்
ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, Mannappan Street, Kottur, Chennai - 600 085
Tel : 044-2447 4744



இமைப் பொழுதில்
**கண் முன்**
**உங்கள் கிரெடிட் கார்டு**

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

**சிட்டி யூனியன் பேங்க்**
www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**




# வேதபாரதி செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்**

மஹாகவி பாரதி

## ஆறாம் ஆண்டு

பாரத பண்பாட்டு அமைப்பான 'வேதபாரதி'யின் மாதாந்திர ஆன்மீக பத்திரிகையான "வேதபாரதி செய்திகள்" ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் முடிந்து இந்த மாதம் (2019 அக்டோபர்) ஆறாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது.

இத்தருணத்தில்

'வேதபார செய்திகள்' பத்திரிகையின் அன்பான சந்தாதாரர்களும் பத்திரிக்கைக்கான செய்திகளை வடிவமைத்து தட்டச்சு செய்து கொடுக்கும் வேளச்சேரி 'ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்' நிருவனத்திற்கும்.... பத்திரிக்கையை புத்தகவடிவில் சிறப்பாக அச்சடித்து தரும் சென்னை சபாநாயகம் பிரிண்டர்ஸ் உரிமையாளர் அவர்களுக்கும்... விளம்பரங்கள் மூலம் பேராதரவை அளித்துவரும் நிறுவனங்களுக்கும் பத்திரிகை மாதாமாதம் சிறப்பாக வெளிவர அயராது பாடுபடும் வேதபாரதி உறுப்பினர்களுக்கும்

**வேதபாரதியின்**
**அன்பான வாழ்த்துக்கள்**

வேதபாரதி செய்திகள்
புத்தகக்குழு

குறிப்பு: இந்தமாதம் முதல் வாசகர்களுக்காக பத்திரிகை அதிக பக்கங்களுடன் புதிய சுவையான தொடர் பகுதிகளுடன் வெளிவருகிறது.


புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்ட்ஸ்**
*1, லட்சுமிநகர், 100 அடி சாலை, வேளச்சேரி, செ - 42. செல்: 8939000064*

## வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 12

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.


## புத்தகத்தின் உள்ளே


**புத்தகக் குழு**

ஸ்ரீ டி. சூரியநாராயணன்
ஸ்ரீ ஸ்ரீகாந்தன்
ஸ்ரீ G.விஸ்வநாதன், Vly
ஸ்ரீ விஸ்வநாதன், Ngr
ஸ்ரீ K. ராமன்
ஸ்ரீ மணிசங்கர்
ஸ்ரீ சங்கர்
ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி
ஸ்ரீ M.V. சுப்ரமணியன்
ஸ்ரீ K.N. பத்மநாபன்
ஸ்ரீ சாந்தா நாகராஜன்
ஸ்ரீ K. நாராயணன்
ஸ்ரீ நடராஜன்
ஸ்ரீ K. ஸ்வாமிநாதன்
ஸ்ரீ V. ஸ்ரீராம்

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.100 |
| ஆயுள் சந்தா | ரூ.1500 |

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை
மேற்கண்ட அலுவலக முகவரிக்கு
அனுப்பவும். சந்தா புதுப்பிப்பவர்கள்
தங்களுடைய சந்தா எண்ணைத்
தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா நன்கொடை
வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**




# அறிவோம் வேதம்

இனி இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வேதமந்திரங்களையும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

**அந்யோப்1 யேவம் யோ வித3த்4த்மமேவ|**

**- கா1ட2கோ1பநிஷத்.**

பொருள்: ஒருவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் ஆத்மனை நசிகேதனைப் போல் உணர்த்தும் பிரம்மத்தை அடைந்தவனாகி பாவங்களிலிருந்து விடுதலையாகிறான்.

"யார் உணர்ந்தாலும் அவர் முக்தராகி விடுவார்" என்பதுதான கடோபநிஷத் (காடகோபநிஷத்) சொல்லும் உண்மை.

நசிகேதன் யமனிடமிருந்து ஆத்ம தத்துவத்தை உணர்ந்து முக்தனானான். அதைப் போல் யார் வேண்டுமானாலும் முக்ராக முடியும். ஆத்மனை உணர்வதற்கு எல்லோருக்கும் பூர்ண ஸ்வதந்திரம் உண்டு.

//ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி://

**ஸ்ரீரமண பாரதி**
**(க்ருஷ்ண ஜகந்நாதன்)**

# தமிழ் வேதம்

**"தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே."**

ஆசாரியரது அழகிய வடிவத்தைத் தரிசிப்பதே அறிவின் விளக்கமாகும். அவருடைய திருப்பெயரை உச்சரித்தலே நம் அறிவிற்கு விளக்கம் ஆகும். அவருடைய சிறந்த உபதேசங்களைக் கேட்டலே அறிவின் தெளிவாகும். அவருடைய வடிவத்தை உள்ளத்தில் நிலையாகக் கொண்டு தியானம் பண்ணுதலே அறிவின் தெளிவாகும் என்று திருமூலர் கூறுகிறார் அதைப்போல், குருவின் வரலாற்றைப் படிப்பதும் அதை நினைந்து போற்றுதலும் வாழ்வின் பயனாகும்.

# ஒரு நிமிடம் உங்களோடு

மனித வாழ்க்கை ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் கனவுகளும் நிறைந்தது. எதிர்பார்ப்புக்கள் இல்லையானால் வாழ்க்கையே இல்லை என்று கூறலாம். சிறுவயதில் நாம் நினைப்பதையெல்லாம் நம் பெற்றோர்கள் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். படித்து முடித்ததும் நாம் நினைத்த வேலை கிடைக்க வேண்டும். அடுத்து நாம் எதிர்பார்க்கும் சம்பளம் கிடைக்க வேண்டும். பிறகு நல்ல மனைவி அமையவேண்டும். ஆடம்பரமான வாழ்க்கை வேண்டும். எந்தவித வியாதியும் இல்லாமல் இருக்க வேண்டும். இப்படி வாழ்க்கை முழுவதும் எதிர்பார்ப்புகள், எதிர்பார்ப்புக்கள்....

நம்முடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றார்போல் வாழ்க்கை அமையவில்லையானால் வாழ்க்கையில் தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன. முதலில் நம் உள்ளம் தளர்ந்துவிடுகிறது. அதனால் உடலும் தளர்ந்துவிடுகிறது. ராமாயணத்தில் தசரத சக்ரவர்த்தி தன் மகன் ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்தபின் தான் எதிர்பார்த்தது நடக்காததால்தான் உள்ளம் தளர்ந்து உடல் தளர்ந்து உயிரையே விட்டார்.

இவ்வாறு வாழ்க்கையில் எதிர்பார்த்தது நடக்கவில்லையானால் அல்லது கிடைக்கவில்லையானால் உடல் தளர்ந்தாலும் நம் உள்ளம் தளராமல் எப்படி காப்பது என்பதை "ஸ்ரீமத் பாகதம்" நமக்கு உணர்த்துகிறது. சிறுவயது முதலே நம்முடைய மனதில் பதிந்திருப்பது "என்னுடைய சரீரம்தான் என்னுடைய சக்தி" ஆனால் ஸ்ரீமத பாகவவதம் வறுகூது" என்னைத் தளர்த்துவது என்னுடைய சரீரம் அல்ல என்னைத் தளர்த்துவது என்னுடைய மனதுதான்" எனகிறது. எப்போது நாம் தளர்கிறோமோ, எப்போது தடுமாற்றம் ஏற்படுகிறதோ, எப்போது கவலைப்படுகிறோமோ அப்போது நாம் நினைக்க வேண்டியது "நம்முடைய குழப்பத்திற்கு காரணம் நம் மனதுதான்" இதைத்தான் நம்முடைய ரிஷிகள் கூறியுள்ளார்கள்.



## 'மன ஏவ மனுஷ்யாணாம் காரணம் பந்த மோட்க்ஷயோ"

ஒருவருக்கு மனமே அவருடைய உறவும் விரோதியும் ஆகும்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணருடன் வாழ்ந்த அவருடைய உற்ற நண்பர் "உத்தவர்". கிருஷ்ணன் உடுத்திய உடைகளை உடுத்திக்கொண்டவர். கிருஷ்ணன் சாப்பிட்ட பாத்திரத்தில் தான் அவர் சாப்பிடுவார். அப்படிப்பட்ட நட்பு கடைசியில் கிருஷ்ணன் தன்னை விட்டுவிட்டு போகும்போது மானசீகமாக தளர்ந்து கிருஷ்ணனைப்பார்த்து "கிருஷ்ணா உனக்காக நான் என் வாழ்க்கையைத் தியாகம் செய்தேன். இப்போது என்னை கைவிட்டுவிட்டு போகிறாயே இது சரியா கிருஷ்ணா? நீ எனக்கு நன்றி காட்டவில்லையே. எதனால் என்னை கைவிட்டுவிட்டுப் போகிறாய்? என்று கேட்கிறார் அப்போது பகவான் உத்தவரிடம் "உத்தவரே யாராலும் யாரையும் கொண்டுபோகவும், உயர்த்தவும் முடியாது" என்று கூறிவிட்டு ஒரு கதையைச் சொல்லி அந்த கதை தொடர்பாக ஒரு ஸ்லோகத்தையும் சொல்லி உத்தவரை சமாதானப்படுத்துகிறார்.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி
**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**
எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர், வேளச்சேரி, சென்னை – 600 042.
Cell : 94434 95950 | Email - vedabharathichennai@gmail.com

# வாழ்த்து செய்தி

*அனுப்புனர்*
*டாக்டர் கே. நடராஜன்*
*ஸ்ரீ சங்கரா மருத்துவமனை*
*மங்களம் ரோடு, திருப்பூர்*

*தலைவர் : ஸ்ரீ விஷ்ணு சகஸ்ரநாம மண்டலி திருப்பூர்*

**வேதபாரதி செய்திகள் :**

*ஆன்மீக, பாரத கலாச்சார மாதப் பத்திரிக்கை 6ம் ஆண்டில் அடியெடுத்து வைத்து சேவை செய்வது குறித்து மற்றற்றமகிழ்ச்சி வாழ்த்துக்கள்.*

*பத்திரிக்கை தர்மத்தை முழுமையாக கடைபிடித்து பாரத கலாச்சாரத்தை முன்நிறுத்தி குடும்ப வாழ்க்கை முறைகருத்துக்களை தீர்க்கமாக வலியுறுத்தி பக்தி மார்க்கத்தை நிலைநிறுத்தி ஆச்சார்யர்களின் வழிகாட்டுதல்களோடு பாரபச்சமின்றி வெளிவந்துகொண்டிருக்கும் வேதபாரதியை பொக்கிஷமாக பாதுகாக்கப்படவேண்டிய அறிவு கலஞ்சியம்.*

*திருப்பூர் ஆன்மீக மக்களின் மனதில் என்றும் நிலைகொண்டிருக்கும் பூஜ்யஸ்ரீ பரமானந்த சுவாமிகளின் வழிகாட்டுதலில் சிறப்பாக செயல்படும் வேதபாரதி புத்தக குழுவிற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் உங்கள் தொண்டு வாழ்க வளர்க*

*இப்படிக்கு*

**டாக்டர் கே. நடராஜன்**



# ஔவை விழா 2019

*ஔவை விழா 2019, 25.08.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று தாம்பரம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில் சீறும் சிறப்பாக நடைபெற்றது. 48 பள்ளிகளுக்கும் மேலான 620 குழந்தைகள் பங்கேற்று தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வாழ்த்துக்களை பெற்றார்கள். பள்ளிகளில் போட்டி நடத்தி வென்ற மாணவர்கள் ஒரே வகுப்பிற்கு 3 குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தங்கள் பெற்றோர்களுடன் சங்கராபள்ளி வளாகத்திற்கு காலை 8.00 மணி முதல் வரத்தொடங்கினார்கள். 24.08.2019 சனிக்கிழமை மாலை 3.00 மணி முதல் குழந்தைகளுக்கான போட்டி நடத்துவதற்கான அறைகள், படிவங்கள், இருக்கைகள், சரிசெய்தல், பரிசுப்பொருட்கள், பரிசுப் புத்தகங்கள் தயார் செய்தல் பணிகள் ஔவை விழா குழுவினரால் முறையாக செய்து வைக்கப்பட்டு இருந்தது. குழந்தைகள் அரங்கினுள் வரும் போது வேதபாரதி குழுவினரால் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கான அடையாள எண் வழங்கப்பட்டது.*



*வேதபாரதி தன்னார்வ தொண்டர்கள் குழந்தைகளை வகுப்பு அறைகளில் அமர வைத்தும் பெற்றோர்களை அரங்கில் அமரவைத்தும் பணிகளை சிறப்பாகச் செய்தார்கள். ஸ்ரீ சங்கர வித்யாலய பள்ளி ஸ்கௌட்ஸ் மற்றும் பெண்கள் எடுத்துக் கொண்ட பொறுப்புகளும் நிறைவேற்றிய அழகும் மிக்க பெருமையை அளித்தது.*



ஸ்ரீ சங்கரா எஜீகேஷனல் ட்ரஸ்ட் மற்றும் வேதபாரதி எடுத்த முயற்சிகள் ஒளவை விழா குழுவின் மூலம் செயல்படுத்துவதில் குறிப்பிட்ட வெற்றியும் இலக்கும் அடைந்தார்கள். மேலும் இந்த ஆண்டு பள்ளி ஆசிரியப் பெருமக்கள் குழுவில் இடம் பெற்று நிகழ்ச்சி நன்கு நடத்திட உறுதுணையாக இருந்தார்கள்.

நடுவர்களுக்கான குறிப்புகள் வழங்கப்பட்டு சிற்றுண்டி முடிந்தவுடன் 9.30 மணிக்கு மனப்பாடப்போட்டி துவங்கியது. ஸ்ரீ நாராயணன் அவர்கள் எடுத்த முயற்சியால் நடுவர்கள் தீர்மானம் செய்யப்பட்டு குறித்த நேரத்தில் போட்டிகள் துவங்கின.

அரங்கில் திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் பெற்றோர்களுக்கான குறிப்புகள் குழந்தை வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு வகுப்பு நடத்தினார்கள். செயலாளர் வெங்கட்ராமன் வேதபாரதியின் செயல் திட்டங்கள் குறித்து கூறினார்கள். மாதுஸ்ரீ, பிரேமா க்ருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் குடும்ப தர்மம் குறித்த சொற்பொழிவு செய்தார்கள். மேடையில் நடந்த பேச்சுப்போட்டியில் சிறப்பு விருந்தினராக ஸ்ரீ எல்.ஜி. அண்ணாவும் நடுவராக பணிபுரிந்து குழந்தைகளை உற்சாகப்படுத்தினார்கள்.

நங்கநல்லூர் வேதபாரதி யுவஸ்ரீக்கள் இறை வணக்கம் பாட பரிசளிப்பு விழா நடைபெற்றது. வேளச்சேரி கோவில்கள்



ஒருங்கிணைப்பு குழு பொறுப்பாளரும், ஸ்ரீ தண்டீஸ்வரர் கோவில் நற்பணியாளர் சிவத்திரு. குமாரராஜா, பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீமான் இல.கணேசன் பொற்றாமரை நிறுவன தலைவர் அவர்களும் மாதுஸ்ரீ, பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களும் குழந்தைகளுக்கு பரிசளித்து பாராட்டி கௌரவித்தார்கள்.

சிவத்திரு. ஆடலரசு உழவாரப்பணிகுழு தலைவர் அவர்களின் சீரிய முயற்சியால் வேளச்சேரி தீபம் அறக்கட்டளை நிர்வாகியும் தன்னலமற்ற சேவா ரத்னா திருமிகு. பாலகிருஷ்ணன் அவர்கள் 1300 பேருக்கு உணவு தயார் செய்தல் வழங்குதல பொறுப்பேற்றுக்கொண்டார். சமையல் பொருட்கள் வாங்குவதற்கு நல் உள்ளங்கள் பேருதவியோடு விழா சிறப்படைந்தது.

குழந்தைகளுக்கான பரிசுப்பொருட்களை வாங்கிட திருப்பூர் என்.பி.நிட்வேர் ஸ்ரீ பழனிச்சாமி அவர்கள் உதவி செய்தார்கள், விழாக்குழு பொறுப்பாளர்கள் ஸ்ரீநாராயணன், ஸ்ரீராமசுப்பிரமணியம் பொறுப்பேற்றார்கள். ஒளவை விழா தொடர்ந்து நடைபெறவும் பாவை விழா சிறப்பாக நடைபெறவும் அடித்தளம் அமைத்துக் கொடுத்த டாக்டர் எஸ். ராமதாஸ் அவர்களும் வேளச்சேரி டி.சூர்யநாராயணன் அவர்களும், அவர்களுடைய சீரிய துள்ளியமான பணிகளும், எவ்வித தடையும் இல்லாமல் சீராக நிகழ்ச்சி நடந்திட அமைத்துக் கொடுத்த வழிமுறைகளும் மிக வழிகாட்டுதலாக இருந்து விழா வெற்றிகரமாக நடந்து வருகிறது. எல்லோரும் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ வாழ்த்தும்

அன்புடன்
செயலாளர்

## புரட்டாசி - ஐப்பசி மாத விசேஷங்கள்
### (செப்டம்பர் 1/2019 முதல் செப்டம்பர் 30/2019 வரை)

| தேதி | | கிழமை | விசேஷம் |
|---|---|---|---|
| 22 | 5 | ஞாயிறு | மத்யாஷ்டமி மஹாவ்யதீபரதம் |
| 23 | 6 | திங்கள் | அவிதவா நவமி |
| 25 | 8 | புதன் | ஸர்வ ஏகாதசி |
| 28 | 11 | சனி | ஸர்வ மஹாலய அமாவாஸ்யை |
| 29 | 12 | ஞாயிறு | ஆஸ்வீஜ சுத்த நவராத்திரி உற்சவ ஆரம்பம் |
| அக் | | | |
| 7 | 20 | திங்கள் | ஸ்ரீ ஸரஸ்வதி பூஜை (மஹாநவமி) ஆயுத பூஜை |
| 8 | 21 | செவ் | விஜயதசமி |
| 9 | 22 | புதன் | ஸர்வ ஏகாதசி |
| 13 | 26 | ஞாயிறு | பௌர்ணமி |
| 14 | 27 | திங் | ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் ஜயந்தி |
| 17 | 30 | வியா | ஸங்கடஹர சதுர்த்தி |
| ஐப்பசி | | | |
| 18 | 1 | வெள் | துலா ஸ்நானம் ஆரம்பம். துலாவிஷீ ஆரம்பரம் |
| 19 | 2 | சனி | சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் ஆராதனை |
| 24 | 7 | வியா | ஏகாதசி |
| 28 | 11 | திங்கள் | ஸ்கந்த ஷஷ்டி உத்ஸவ ஆரம்பம் |
| அக் | | | |
| 10 | 23 | வியா | நரசிங்க முனையறைய நாயனார் முக்தி பெற்றநாள் |
| 14 | 27 | திங்கள் | உருத்திரபசுபதி நாயணார் முக்தி பெற்றநாள் |



### ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகள் அருளிய
## மானஸீக பூஜையின் சிறப்பு

வைகானஸ பாஞ்சாரத்தின் சைவ தாந்திரிக ஆகமிகர்கள் எல்லாரும் மானஸிக அர்ச்சனையை ஒப்புக்காண்டார்கள், பூஜாக்கிரமத்தில் இதற்கு இடம் முக்கியமாக உள்ளதா இல்லையா என்பதில் விவாதம் எதுவும் ஏற்படவில்லை. மானஸிக அர்ச்சனம் பூஜை முறையில் மிகவும் முக்கியமான ஸ்தானம் பெற்றுள்ளது.

பூஜையை ஆரம்பிக்கும்பொழுது கவாடோத்காடனம் (கதவைத் திறப்பது) முதற்கொண்டு த்ரவ்யார்ச்சனம் (திரவியங்களை அர்ச்சிப்பது) என்றநிகழ்ச்சி வரையில் நிறைவேறிய பிறகு 'ந்யாஸம்' என்பது முக்கியமான பாகமாகச் சொல்லியிருக்கிறது. இந்த ந்யாஸம் என்பது ஆராதனம் செய்யும் அர்ச்சகர்களுடைய சரீரத்துடன் சம்பந்தப்பட்டது. ஆராதிக்கப்படும் பிம்பத்துக்கும் செய்யவேண்டிய முக்கியமான அம்சம். வைகானஸ பகவத் சாஸ்திரத்தில் மிக அழகாகவும், மிகமுக்கியமானதாகவும், மிக விரிவாகவும் நியாஸம் கூறியிருக்கிறது. எந்தக் காரியத்தையும் சரியான முறையில் செய்தால்தான் நல்ல முறையிலும், அதிகமான ரீதியிலும், நாம் விரும்பிய முறையிலும் பலனை எதிர்பார்க்க முடியும். இது நடைமுறைவிவகாரங்களில் நன்றாக அறிந்த விஷயம்.

பூஜாக்கிரமத்தில் முதல் முதலில் பூஜை செய்யும் அர்ச்சகரின் சரீரத்துக்கு ந்யாஸம் சொல்லியிருக்கிறது. பூஜகர் முதலில் தம்முடைய சரீரத்தைப் பரிசுத்தமாகச் செய்துகொள்ள வேண்டும். பிறகு பிம்பத்தின் பூஜையைத் தொடங்க வேண்டும். ஸ்ரீ வைகாநஸ பகவத் சாஸ்திரத்தில் முதலில் சரீரத்துக்குத் தான் ந்யாஸம், பிறகு பிம்பத்துக்கு ந்யாஸம். "பாபபுருஷகல்பனம்-சோஷண-தாஹன-ப்லாவன-பிண்டீகரண-ஸௌஷிரீகரண-ஸாவயவீகரண-புண்யபுருஷகல்பனம்" என்று கொன்னபடி பூஜகர் தம்முடைய சரீரத்தைப் பாபசரீரமாகப் பாவித்துக்கொண்டு, பிறகு அதைச் சோஷிக்கசெய்து, தாஹிக்கச்செய்து ப்லாவன, பிண்டீகரண,

ஸூக்ஷ்மிரிகரணங்களுக்குப் பிறகு கரசரணாத்யவய வங்களோடு கூடிய புண்யபுருஷ ஸ்வரூபமாகப் பாவித்துக்கொண்டு பிறகு ந்யாஸங்கள் செய்துகொள்ள வேண்டும், அதற்கப் பிறகுதான் அந்தப் பூஜகர் பகவதாராதனதுக்குத் தகுந்தவராகிறார்.

பகவத் பிம்பத்துக்கு, “பாபபுருஷகல்பனம் முதல் புண்யபுருஷ கல்பனம்” வரையில் கூறப்பட்ட நிலைகள் இல்லை. ஆனாலும் பூஜகரின் சரீரத்துக்குச் செய்துகொள்ளும் ந்யாஸங்கள் பிம்பத்துக்கும் உண்டு. பிம்பந்யாஸம் செய்த பிறகு ஆவாஹனம் அர்ச்சனம் முதலிய பூஜாக்கிரமங்கள் உள்ளன. ஆகவே மானஸிக அர்ச்சனத்தின் அம்சமாகிய ந்யாஸமும் பூஜாக்ரமத்தில் முக்கியமாகும். ந்யாஸத்துக்குப் பிறகு மானஸிக அர்ச்சனம். “ஆத்மாநம் நாராயணம் புத்வா” என்று கூறியபடி தம்மை ஸாக்ஷாத் நாராயணனாகவே பாவித்துக்கொண்ட பிறகுதான் பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

பூஜகர் தம்முடைய சரீரத்தைப் பகவத் ஸ்வரூபமாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்றால் அந்தச் சரீரம் புண்ய சரீரமாக ஆகிவிட வேண்டும். சாதாரண பாப சரீரமாக இருந்தால் அந்தப் பகவத் ஸ்வரூப பாவனாரூப எண்ணம் உதிக்காது என்பது மஹரிஷிகளுடைய அபிப்பிராயம். ஆகவே, பூஜா விதியில் சொன்னபடி பூஜகர் தம்முடைய சரீரத்தைப் புண்ணிய சரீரமாகச் செய்துகொண்டு, பிறகு தம்மை ஸாக்ஷாத் நாராயணனாகப் பாவித்துகொண்டு பிறகுதான் மானஸிக அர்ச்சனம் செய்ய வேண்டும்.

தொடரும்.

**பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளுக்கு ஸ்ர்த்தாஞ்சலி**

திருப்பூர் ஆன்மீக மக்களின் சார்பாக பூஜ்யஸ்ரீ பரமாணந்த பாரதி ஸ்வாமிகளுக்கு 12.10.2019, சனிக்கிழமை அன்று திருப்பூர் சபாபதிபுரம், ஹர்வி, குமாரசாமி கல்யாண மண்டபத்தில் ஸ்ர்த்தாஞ்சலி மாலை 7.00 மணி முதல் 8.30 மணிவரை நடைபெறஉள்ளது. அன்பர்கள் கலந்து கொண்டு அருளாசிபெறஅன்புடன் வேண்டுகிறோம்.



## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## இறைவனின் செயல்களில் குறையில்லை



ஒருவனுக்கு இரண்டு வேலைக்காரர்கள் இருந்தார்கள். அவர்களுள் ஒருவன், தன் எஜமானனை எப்பொழுதும் துதி செய்து கொண்டேயிருப்பான். ஆனால், அவர் இடும் கட்டளையை மட்டும் நிறைவேற்றவே மாட்டான். மற்றொருவன், தனக்கிட்ட வேலைகளை மிகவும் சிரத்தையுடன் செய்வான். அவனும் தன் எஜமானனை உயர்ந்த ஸ்தானத்திலேதான் வைத்திருந்தான். எஜமானனுக்கு அவ்விருவருள் யாரிடத்தில் பிரியம் அதிகமிருக்கும்? நிச்சயமாக இரண்டாவது வேலைக்காரனைத்தான் எஜமானன் மிகவும் விரும்புவான். ஓர் உண்மையான பக்தனும், இரண்டாவது வேலைக்காரனைப் போலவே, இறைவனால் தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளையும் மற்றும் சாஸ்திரங்களில் கூறப்பட்ட கட்டளைகளையும் மிகவும் சிரத்தையுடன் நிறைவேற்றுவான். தவிரவும், பலன்களை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் ஒரு மனப்பாங்குடன் அக்காரியங்களை அவன் செய்ததுடன், அவருடைய பரிபூரண அனுக்ரஹத்தையும் பெறுகிறான். இறைவனின் அருளால் அவன் உள்ளம் தூய்மையடைகிறது. காலப்போக்கில் அவன் பேருண்மையை உணர்ந்து முக்திநிலையை அடைகிறான்.

- தொடரும்...




# காந்திஜீயின் வாழ்வில் அந்தக் கடைசி 150 நாட்கள்

**உணர்வுபூர்வமான ஓர் உரை**

நிகழ்த்துபவர்

**ஆர்.பி.வி.எஸ். மணியன்**



| | |
|---|---|
| **2 நாட்கள்**<br>**12.10.19 சனிக்கிழமை**<br>**13.10.19 ஞாயிற்றுக் கிழமை** | மாலை<br>5.15<br>மணிக்கு |

நடைபெறும் இடம் :
குரு பாலாஜி கல்யாண மண்டபம்
3, சுந்தரம் தெரு, தி. நகர்,
[அகஸ்தியர் கோயில், நடேசன் பார்க் இடையில்]

வந்து செவிமடுப்பீர் – வரலாற்று உண்மை அறிவீர்

**விவேக பாரதி**

T.V. ரமா
தலைவர்

தி. சந்திரமௌலி
ஒருங்கிணைப்பாளர்

ச. மங்கையர்க்கரசி
செயலாளர்



## சுபாஷிதம் - 11

''சுபாஷிதம் என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவரும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**தபூதபூர்வந கதாபி வார்த்தா ஹேம்ந: குரங்கோ ந கதாபித்ருஷ்ட:**

**ததாபி த்ருஷ்ணா ரகுநந்தனஸ்ய வினநாஷகாலே விபரீத புத்தி:**

முன் ஒருபோதும் நிகழ்ந்ததோ, யாரும் கேட்டதோ, பார்த்ததோ இல்லை இருந்தாலும் ஸ்ரீமான் பொன் மானைத் தேடிச் சென்றான். அழிவுகாலம் நெருங்கும்போது அறிவு துலக்காது.

**ந ஜாது காம: காமானா முபபோகேன ஷாம்யதி**

**ஹவிஷா க்ருஷ்ணமர்த்மேவ பூய ஏவாபிவார்த்ததே**

எந்த ஓர் ஆசையும் அடைந்த பின்னும் முழுமையாகத் தீராது மேலும் வளர்கிறது. வேள்வியில் வார்க்கப்படும் நெய் மேலும் தீயை வளர்க்கிறதே அன்று தீர்ப்பதில்லை.

**அபிகம்யக்ருதே தானம் த்ரேதாஸ்வாஹுயதீயதே**

**த்வாபரே யாசமானாய ஸேவாய தீயதே கலௌ.**

க்ருத யுகத்தில் கொடுப்பவன் யாசிப்பவனை அடைந்தும், த்ரேதா யுகத்தில் யாசிப்பவனை வரவழைத்தும், த்வாபர யுகத்தில் தன்னிடம் வந்து யாசிப்பவனுக்கும், கலியுகத்தில் செய்த சேவைக்கு ஈடாகவும் தானம் செய்யப்படுகிறது.

தொகுப்பு : **பரிதி**

சுபாஷிதம் பகுதி தொடர்ந்து வெளிவர நிதிஉதவி செய்து வருபவர்
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**
வேளச்சேரி

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 38

*நீங்கள் மிக முக்கியமாக செய்ய வேண்டியது என்ன என்று யோசித்து விட்டீர்களா? அதைப் பற்றி அடுத்த மாதம் பேசுவோம்.*

அதற்கு முன்பு பெண் குழந்தைகளிடம் 'டீன் ஏஜ்' பிரச்சினையை எப்படி காண்பது என்று பார்ப்போம்.

பல பெற்றோர்களுக்கு "என் வீட்டில் நான் பெண் என்பதால் என்னை மதிக்கவில்லை. ஆனால் என் பெண்ணை அப்படி வளர்க்க மாட்டேன். முழு சுதந்திரம் அளித்து, அவளுக்கு இஷ்டமானதை செய்யும்படி சொல்லி வளர்ப்பேன்" என்று என்னிடம் கூறுவார்கள்.

இதற்கு நேர்மாறாக "இதுங்களையெல்லாம் வெக்கற இடத்துல வெக்கணும். கொஞ்சம் இடங்கொடுத்தா போம் தலைமேலே ஏறிடுங்க. அதனால் நான் ரொம்ப 'ஸ்டிரிக்ட்' என்று கூறுபவர்கள் பலர் உண்டு.

இவையிரண்டையும் தாண்டி "என் குழந்தைகிட்டே எல்லாம் 'டிஸ்கஸ்' செய்யணும். அவளை 'ஆல் இன் ஆல் அழகுராணியாக' மாற்றியே ஆகணும். அதனால் பேசிச் கொண்டேயிருப்பேன். சொல்லி சொல்லி மாற்றணும். ஆனால் பாருங்க இப்ப 14 வயசு தான் ஆகிறது. நான் சொல்றதை காதில் போட்டுக் கொள்வதேயில்லை. கொஞ்சம் 'அட்வைஸ்' பண்ணுங்க" என்பவர்கள் உண்டு.

பொதுவாக இந்திய பெண்கள் இந்த மூன்று வகை வளர்ப்பு முறையி ஏதாவது ஒன்றை பின்பற்றுகிறார்கள்.

முதலில் ஒரு 'டீன் ஏஜ்' வயதை எட்டும் பெண் கொண்டாட்டங்களுக்குப் பிறகு சதா கண்காணிக்கப்படுகிறாள். தன் உடல் மீதான குழப்பம், ஒரு ஆண் மகன் போலவே படித்து, முன்னேறி, வேலைக்குச் சென்று உன் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று கூறப்படும் வளர்த்து இப்பொழுது திடீரென்று "ஒரு பெண்ணாக இரு", தொட்டு பேசாதே', 'சக மாணவர்களுடன் பேசாதே', 'யாரையும் நம்பாதே' போன்ற எதிர்மறை கட்டளைகள் மிகுந்த குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.



இந்த ஓயாத பார்வை (வீடு மற்றும் வெளியுலகம்) கட்டளைகள் அவளை தனிமை மற்றும் சக மாணவ - மாணவியரிடம் அழைத்துச் செல்கிறது.

'நான் அழகாகயில்லை. மூக்கு குண்டாக இருக்கிறது' என்றெல்லாம் கவலைப்படும் பெண்களுக்கு தொலைக்காட்ச விளம்பரங்கள் 'வெள்ளையாக ஆவது எப்படி என்று போதித்துக் கொண்டேயிருக்கிறது.

அது போதாது என்று 'வெள்ளை வெளேர்' துணிமணிகள் ஒரு பெண்ணுக்கு வேலை வாங்கித் தருகிறது என்று கூறுகிறது. இப்படி சதா தங்களை ஆட்டிப்படைக்கும் வெளியுலகம், அதனால் பெண் குழந்தைகளை நம்ப மறுக்கும் தாய் தந்தையர் என்று இன்றைய குடும்பங்கள் அவப்படுகின்றன.

ஒருமுறை ஒரு 15 வயது பெண் என்னிடம் அழைத்து வரப்பட்ட பொழுது மூன்றாவது தடவை தான் மனம் திறந்து பேசினாள். "என்னை வேவு பார்க்க என் தங்கையை என்னோடு அனுப்புகிறார்கள். என் மீது நம்பிக்கை வைக்கவிலை அதனால் நான் என் பெற்றோரை மதிப்பதில்லை" என்றாள்.

"இதிலென்ன தப்பு. காலம் கெட்டு கிடக்கு. எது தப்பு, என சரியென்று அவளுக்கு தெரியாத வயது. அவள் நன்றாக இருக்கணும் என்று தானே இதைச் செய்கிறோம்" என்றனர் பெற்றோர்.

"ஏன், உன் இரண்டாவது பெண் வயதுக்கு வந்தால் யாரை வெச்சு வேவு பார்க்க வெப்பே" என்றாள் மூத்தவள்!

ஒரு 'டீன் ஏஜ்' பெண்ணை எந்த அளவுக்கு நம்ப வேண்டும் ? யாரை வைத்து அவர்களை சரி செய்ய வேண்டும்? யாரையாவது இன்றைய காலத்தில் நம்ப முடியுமா? சொந்தக்கார பசங்களே 'அசிட்' ஊத்துவது, கொலை செய்வதுமாக இருக்கிறதே என்று பெற்றோர் கலைப்படுகின்றனர்.

பெற்றோர்களே, நீங்கள் எதை விதைத்தீர்களோ அதை அறுவடை செய்ய வேண்டும் என்று முதலில் புரிந் கொள்ளுங்கள்.

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்."

"புத்திசாலித்தனந்தான் துன்பம் வராமல் தடுத்துக் கொள்வதற்கு ஆயிதம். அது மனதுக்குள் இருந்தால் பகைவர்களால் புகுந்து அழித்துவிட முடியாத பாதுகாப்பு அளிக்கிறது'' என்று ஒரு பிரச்சினையை அறிவுபூர்வமாக அடைய வழி வகுக்கிறார் வள்ளுவர்."

# எளிமையான வாழ்வு

முன்னெல்லாம் பணக்காரர்கள் கூட எளிமையாக உடை உடுத்தி எளிமையான உணவு உண்டு ஏழைகளுக்கு அவர்கள் மீது பொறாமையோ பொச்சரிப்போ வராமல் வாழ்ந்தார்.

இப்போது டாம்பீகத்தைப் பறைசாற்றுவது பலருக்கு சுபாவம் ஆகிவிட்டது. வசதியுள்ளவன் டாம்பீகமாக வாழ்வதைப் பார்த்து இல்லாதவனும் கடன் உடன் வாங்கியாவது டாம்பீக வார்க்கை நடத்துகிறான். இதற்கேற்ப அரசும் வங்கிகளும் பெர்ஸனல் லோன், வெஹிகிள் லோன் என்றெல்லாம் கொடுத்து எல்லோரையும் கடனாளிகள் ஆக்குகிறார்கள். பல பெரிய பெரிய கடைக்காரர்களும் --ல் பொருட்களை வாரித்தரு கிறார்கள். பெரிய பணக்கார தொழிலதிபர்கள் வாங்கிய வங்கிக் கடனைத் திருப்பித்தராமல் ஏமாற்றி எளிய விவசாயிகளும் கடனைக் கொடுக்காமல் இருக்க வழிகாட்டுகிறார்கள்.

ஆன்மீக முன்னேற்றத்திற்கு லௌகிகமாக சுக சாதனங்கள் தடையாகவே உள்ளன. எத்தனை ஸௌகர்ய ஸாதனங்களை நாம் சம்பாதித்தாலும் மனம் த்ருப்தியுறாமல் அடுத்தவர்களிடம் இருப்பவற்றை நாமும் பெற வேண்டும் என்று அலைந்து கொண்டுதான் இருக்கும்.

இந்த ஸுக ஸாதனங்களை தேடி அலையும் மனதை உள் முகமாக திருப்ப த்யானம், ஆன்மீகச் சொற்பொழிவுகளைக் கேட்டல், பஜன்களில் கலந்து கொள்வது, பூஜைகளில் பங்கேற்பது என்று வார்வின் போக்கை சற்று மாற்றி அமைத்துக் கொள்வோம்.

தொகுப்பு : **ஆர்.பி.வி.எஸ். மணியன்**

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**

எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
| --- | --- |
| 9444140119 | 7092199447 |




# பிரதக்ஷிணம்

“வேதபாரதி செய்திகள்” வாசகர்களை கடந்த பத்து மாதங்களாக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை “பிரதக்ஷிணம்” வைக்க அழைத்துச் சென்றோம். சிவ உருவம் கொண்ட எறும்பு முதல் பெரிய உருவம் கொண்ட யானை வரை பலவித மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் என பல உயிரினங்கள் இறைவனை வழிபட்டதாக தமிழகத்தில் ஏராளமான கோயில்கள் உள்ளன. இந்த மாதம் முதல் அப்படிப்பட்ட கோயில்களுக்கு வாசகர்களை அழைத்துச்செல்லவிருக்கிறோம்.

*பிரதிக்ஷிணம் - 11*

திருவானைக்காவல் (யானையும், சிலந்தியும் வழிபட்ட ஸ்தலம்)



‘‘திருவானைக்காவல்’’ காவேரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடையில் உள்ள தீவில் அமைந்துள்ள கோயில் இந்த இடத்திற்கு “ஆனைக்கா” என்று பெயர் இருந்தது. “ஆனைக்கா” என்றால் யானைக வசித்துவந்த காடு என்று பொருள் புராண காலத்தில் வெண் நாவல் மரங்கள் நிறைந்த காடாக இருந்தது இத்தலம் அந்த காட்டில் ஒரு வெண் நாவல் மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது.

கைலாயத்தில் இருந்த இரண்டு கணநாதர்கள் தாங்கள் பெற்ற சாபத்தால் இக்காட்டில் யானையாகவும், சிலந்தியாகவும் பிறந்தனர், சிவலிங்கம் வெயிலிலும் மழையிலும் இருந்ததால் சிலந்தி சிவலிங்கத்தின் மேல் வலை பின்னி வெயில் மழை மற்றும் மரத்தின் சருகுகள் லிங்கத்தின் மேல் விழாமல் காத்தது. யானை காவிரி ஆற்றிலிருந்து தன்னுடைய துதிக்கையில் தண்ணீர் கொண்டுவந்து சிவனுக்கு அபிஷேகம் செய்து வழிபட்டது.

சிலந்தி கட்டிய வலை தேவையற்றதாக கருதிய யானை அதை அழித்துவிட்டு செல்லும் சிலந்தி மீண்டும் வலையைப் பின்னி தன் வழிபாட்டைத் தொடரும். தினமும் இவ்வாறு நடக்க சிலந்திக்கு யானைமீது கோபம் ஏற்பட்டு அதைத் தண்டிக்க எண்ணி யானையின் தும்பிக்கையுள் நுழைந்து கபாலம் ரை ஏறி யானையைக் கடித்து வேதனை தாங்காத யானை தன் தும்பிக்கையை ஓங்கி தலையில் அடிக்க சிலந்யும் மடிந்தது. யானையும் துடிதுடித்து விழுந்து இறந்துவிடுகிறது. இவைகளுடைய பக்தியை மெச்சிய சிவபெருமான் இருவருக்கும் முக்தி அளித்து யானையை சிவகணங்களுக்குத் தலைவனாக ஆக்கினார். சிலந்தி மறு பிறவியில் கோச்செங்கட் சோழன் என்ற அரசனாகப் பிறந்தது. அந்த பிறவியிலும் யானை மீது கொண்டிருந்த பகையை மறக்காமல் யானை சன்னதிக்கு வரமுயாத சிறிய வாசல் கொண்ட மாடக்கோயில்களாகக் கட்டினான். அவன் கட்டிய முதல் மாடக்கோயில் திருவானைக்கா ஜம்புகேஸ்வரர் கோயிலாகும். சிவலிங்கம் எப்போதும் தண்ணீரில் இருக்கும் அன்னை அகிலாண்டேஸ்வரி பிரசித்தம் இந்த ஊர் பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்று.

திருநாவுக்கரசர் இத்தலத்தைப் பற்றி திருக்குறுக்கை என்னும் தலத்தில் பாடிய பாடல்

**சிலந்தியும் ஆணைக் காவில்**
**திருநிழல் பந்தல் செய்து**
**உலந்து அவண் இறந்த போதே**
**கோசசெங் கணானு மாக**
**கலந்தநீர் காவிரிசூழ்**
**சோணாட்டுச் சோழர் தங்கள்**
**குலந்தனில் பிறப்பித் திட்டார்**
**குறுக்கை வீரட்டானேரே**

பிரதிக்ஷிணத்தில் அடுத்த மாதம் வேறு ஒரு கோயிலுக்குச் செல்வோம்

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா,
ஓம் நமோ நாராயணாயா.

# ஸ்ரீமத் பகவத்கீதை

டி. சூரியநாராயணன் பகுதி - 6



**பகவத் கீதை(யின்) பிறந்த நாள் :**

குருக்ஷேத்திர பூமியில் மார்கழி மாதத்து சுக்ல ஏகாதசியில் (பௌர்ணமிக்கு முந்தைய பதினோராவது நாள் (நவம்பர்-டிசம்பர்) உபநிடதங்களின் சாரமாக விளங்கும் "பகவத் கீதை" பகவான் ஸ்ரீகிருஷ்ணரால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டது. இந்த தினத்தை இன்றும் நம் பாரதத்தில் பல இடங்களில் வருடா வருடம் "கீதா ஜயந்தி'' என்ற பெயரில் அன்று முழுவதும் 700 ஸ்லோகங்களையும் சொல்லி கொண்டாடுகிறார்கள்

பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கும் அர்ஜுனனுக்கும் நடந்த சம்பாஷணைகள் கற்றவர்களுக்கு மத்தியிலோ ஒரு சபையில் நடக்கவில்லை பேரிரைச்சலுடன் கூடிய போர்க்களத்தில் நடந்தது. அந்த இடத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மற்றும் அர்ஜுனனைத் தவிற வேறு யாரும் கிடையாது. (தூரத்தில் சேனைகள் இருந்தார்கள்) அப்படி இருக்க இவர்களின் சம்பாஷணை மற்றர்களுக்கு எப்படி கிடைத்தது? பகவான் அருளினாரா? அல்லது அர்ஜுனன் பின்னர் எல்லோருக்கும் அருளினானா? போன்ற சந்தேகங்கள்சிலருக்கு எழுவது இயங்கையே இவற்றுக்கு தகுந்த காரணங்கள் உண்டு. அவதார புருஷர் ஒருவர் மண்ணில் அவதரிக்குபோதெல்லாம் அவரது அற்புத சரித்திரத்தை உள்ளபடி எழுதி வைக்க ஒரு தீர்க்கதரிசி அவருடனே வருவதுண்டு ஸ்ரீ ராம சரிதத்தை குறிக்க ஸ்ரீவால்மீகி வந்தார். அதேபோல் ஸ்ரீகிருஷ்ணன் அருகில் இருந்தாலும் தூரத்தில் இருந்தாலும் அவருடைய கருத்துக்களை உள்ளபடி அறிந்துக்கொள்ளும் ஞான ஸ்ரீவியாஸ பகவானுக்கு இருந்தது.

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் யுத்தம் நடப்பது உறுதியானவுடன் இரு தரப்பிலும் போருக்கு ஏற்பாடுகளைத் தொடங்கிவிட்டார்கள். அந்த நேரத்தில் த்ருதராஷ்ட்டரை சந்தித்த ஸ்ரீ வியாஸ பகவான் “போர் நடக்கத்தான் போகிறது அதை தடுக்க யாராலும் முடியாது. வெற்றி ஒருவருக்கு நிச்சயம். உனக்கு கண் பார்வை இல்லாததால் நீர் போரை பார்க்க விரும்பினால் நான் உமக்குமட்டும் இந்த சமயத்திற்காக மட்டும் “திவ்ய த்ருஷ்டி” (தெய்வீகப் பார்வை) தருகிறேன் நீர் இங்கு உட்கார்ந்தபடியே போர்க்களக் காட்சிகளைத் தெளிவாக பார்க்க முடியும்” என்று கேட்க திருதிராஷ்ரன் “நான் பிறந்தது முதல் கணபார்வை இல்லாதவன். இப்போது நம் குலத்தவர்களின் அழிவைப் பார்க்க விரும்பவில்லை. அதனால் அந்த சக்தியை ஸஞ்சையனுக்கு அருளிவிடும். பிறகு அவரிடமிருந்து நான் கேட்டுக்காள்கிறேன்'' என்று கூற ஸ்ரீவியாஸ பகவானும் ஸஞ்ஜயனுக்கு திவ்ய திருஷ்ட்டியை அருளினார்.

இதை அமைச்சர் ஸஞ்சயனே கீதையின் 18வது அத்தியாயத்தில் த்ருதராஷ்டிரடம் கூறுகிறான்.

வ்யாஸப்ரஸாதாச் ச்ருதவா னேதத்குஹ்யமஹம் பரம்
யோகம் யோகச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத்கதயத ஸ்வயம்
(கீதை 18-75)

ஸ்ரீவியாச பகவானுடைய அருளினால் தெய்வீகப் பார்வை பெற்ற நான் உயர்ந்த ரகசியமான இந்த யோகத்தை அர்ஜுனனைக் குறித்துச் சொல்லுகின்ற சாட்சாத் யோகேசுவரனா பகவான் ஸ்ரீ கிருஷ்ணனிடமிருந்து உள்ளது உள்ளபடி அப்படியே நேரிடையாகக் கேட்டேன்.

“பகவத் கீதையை உபதேசித்தவர் கண்ணன் கீதையைக் கேட்டவன் அர்ஜுனன் அதை செவிமடுத்து எழுதியகூழ் ஸ்ரீவியாஸ பகவான் அந்தக் காட்சியைத் தனது ஞானக்கண்களால் கண்டு சொன்னவர் “சஞ்சயன்'' அதைக் கேட்டவர் “த்ருதராஷ்ட்டார்''.

தொடரும்....

**டி.சூரியநாராயணன்**



# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
*அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.14. இன்னும் சில கேள்விகள் :

சென்றமாத தொடர்சசி...

*7. ஒருவருடைய கர்மாவை மாற்ற முடியுமா அல்லது அதன் பலனை ஒருவர் அனுபவித்துத்தான் தீர வேண்டுமா?*

கர்மாவை நிச்சயமாக இன்னொரு கர்மாவினால் மாற்ற முடியும். அதற்கு மாற்று மருந்து உள்ளது. ஒரு நல்ல கர்மா, ஒரு கெட்ட கர்மாவால் ரத்தாகும். அதேபோல், ஒரு கெட்ட கர்மா ஒரு நல்ல கர்மாவால் ரத்தாகும். ப்ராரப்தம் ஒரு இன்பகரமான விளைவைத் தருகிறபோது, அது புண்ணியத்தின் பலன். அது துக்கம் தருகிறபோது அது பாபத்தின் பலன், துக்கம் ஏற்பட்ட உடனே, மக்கள் அதன் காரணமான பாபத்தைத் தொலைக்க விரும்புவார்கள். அதற்குத் தேவையான கர்மா, பிராயஸ்த்தம் எனப்படும். அப்பிராயஸ்சித்தம் மூன்று வகைகளின் தரம், அளவு ஆகியவற்றில் பிராயஸ்சித்தம் மாறுபடும். ஒருவர் அதிக அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ உபவாசம் இருக்க வேண்டியிருக்கும். அல்லது இந்த தானமோ அந்த தானமோ செய்ய வேண்டியிக்கும். அல்லது இந்த ஜபத்தையோ வேறு ஜபத்தையோ செய்ய வேண்டியிருக்கும். உபவாசமும் தானமும் எல்லோராலும் செய்ய முடியாது. ஆனால் ஜபம் செய்யும் விஷயத்தில் இவ்வளவு தடைகள் இருக்க முடியாது. எல்லோரும் ஜபம் செய்வதற்கு ஏதுவாக, நமது ரிஷிகள், ஜபவிதிகளைத் தளர்த்தியுள்ளார்கள். ஒருவரால் உட்கார்ந்து கொண்டு ஜபம் செய்ய முடியவில்லையென்றால் அவர் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஜபிக்கலாம். அதுவும் இயலாவிட்டால் படுத்துக் கொண்டும் செய்யலாம். எனவே, ஒவ்வொருவரும் பாபத்தைத் தொலைப்பதற்கோ அல்லது புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்கோ, ஜபம் செய்ய வேண்டும்

*8.* ப்ராயஸ்சித்தமும் நல்ல கர்மாக்களும் செய்த பிறகும், பல நேரங்கள்ல் வெற்றி கிடைப்பதில்லை, ப்ராரப்தம் தொலைக்க

*முடியாதது, அனுபவித்துத்தான் தீர வேண்டியது என்று சொல்லப்படுவதையும் கேள்விப்படுகிறோம். இதை விளக்க முடியுமா?*

*ப்ராரப்தம் என்பமு நாம் மந்தையப் பிறவிகளில் செய்த நம்முடைய கர்மாக்கள்தான். ஆனால், அது எவ்வளவு என்பதும் அது என்ன என்பதும் நமக்குத் திட்டவட்டமகத் தெரியாது. இருப்பினும், அதை அனுபவிக்க வேண்டியுள்ளது. ஆனால், ப்ராயஸ்சித்தம் மூலமாக, அதைத் தீர்த்துக் கொள்ள முடியும். உதாரணமாக தன் பிராரப்தத்தால் எட்டு வயதில் இறக்க வேண்டிய மார்க்கண்டேயன், தன் தவத்தினால் அதை வெற்றி கொண்டான். நெடுங்காலம் வாழ்ந்தான். ப்ராரப்தம் காரணமாக விதவையாயிருக்க வேண்டிய சாவித்திரி, தன் தவத்தால் அதை வென்றாள், ஆனால், ப்ராரப்தத்தை வெற்றி கொள்ள வேண்டிய அளவுக்குத் தவம் செய்வது. பல நேரங்களில். சாதாரண மக்களால் இயலாது. ப்ராரப்தத்தின் அளவு நமக்குத் தெரியாததால், நாம செய்யும் தவத்தால் வெற்றி கிட்டிய பின்தான், அதன் நீக்கம் நமக்குத் தெரிய வரும். செய்யப்படும் தவம். அதன் வலிமையிலோ அளவிலோ அல்லது இரண்டிலுமோ குறைவானதாக இருந்து விடலாம்.*



## பழமொழிகளும் அவற்றுக்குண்டான உண்மையான அர்த்தங்களும்

*பழமொழி என்பது ஒரு செயலுக்கு அல்லது செய்கைக்கு விளக்கம் தர சொல்லப்பட்டது. அந்தக்காலத்தில் சொல்லப்பட்ட பழமொழிக்குண்டான உண்மையான அர்த்தங்கள் நாளடைவில் மருவி தற்போது ஏதோ அர்த்தங்கள் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட பழமொழிகளின் சரியான விளக்கங்கள் இந்தப்பகுதியில் தொடர்ந்து அளிக்கப்படும்.*

### 1. களவும் கற்று மற

*இந்த பழமொழிக்கு தற்போது சொல்லும் விளக்கம் "தீய பழக்கமான களவை (திருட்டையும்) கற்றுக்கொண்டு மறந்துவிடவேண்டும்.*

**உண்மையான பொருள்**

*திருடுதல், பொய் சொல்லுதல் ஆகிய தீய பழக்கங்களை ஒருவன் தன் வாழ்நாளில் மறந்து ஒழுக்கமாக இருக்கவேண்டும்.*

### 2. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?

*தற்போது சொல்லும் பொருள்*

*மண்ணால் செய்த குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?*

**உண்மையான பொருள்**

*மண் குதிர் என்பது மணல் திட்டு அல்லது மேடு என்று பொருள். ஆற்றில் சில சமயம் தண்ணீரின் வேகத்தில் மணலால் திட்டுக்கள் மேடுகள் உண்டாகும். அதற்கு மண் "குதிர்" என்று பெயர். அந்த "குதிரை" நம்பி ஆற்றில் ஆழம் இல்லை என்று நாம் இறங்கினால் ஆற்றில் சிக்கிக்கொள்ள நேரிடலாம்.*

### 3. ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி ஆவான்


*இந்த பழமொழிக்கு தற்போது சொல்லும் விளக்கம்*

*ஒருவன் ஐந்து பெண்பிள்ளைகளைப் பெற்றால் அவர்கள் எல்லோருக்கும் திருமணம் செய்து முடிப்பதற்குள் அவன் ஆண்டி ஆகிவிடுவான்.*

**உண்மையான பொருள்**

*1) ஆடம்பரமாய் வாழும் தாய் 2) பொறுப்பு இல்லாமல் இருக்கும் தகப்பன் 3) ஒழுக்கம் தவறும் மனைவி 4) துரோகம் செய்யும் உடன்பிறப்பு 5) பிடிவாதம் பிடிக்கும் பிள்ளை. இந்த ஐந்தும் கொண்ட எந்த குடும்பமும் முன்னுக்கு வராது. அவன் அரசனாக இருந்தாலு ஆண்டியாகவிடுவான். ... இன்னும் வரும்*

**- தொகுப்பு ஆதித்யன்**




வேதாந்த பிரபோதம் புத்தகம் நம் பூஜ்யஸ்ரீ பரமானநத பாரதி ஸவாமிகள் அருளியது. தற்போது கிரி டிரேடிங் நிறுவனத்தினர் அழகான வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். வேதபாரதி மூலம் பெறுவோர்க்கு சிறப்பு சலுகை உண்டு.

*தொடர்புக்கு : 9444445156 (ஸ்ரீசௌமியநாராயணன்)*
*9790920672 (திரு.பாலசுப்பிரமணியன்)*



## மதங்களும் மனிதநேயமும்

*(Dr. ஷ்யாமா ஸ்வாமிநாதன்)*

குரும்பல் எனும் மிக அழகிய கிராமம். திருவாரூரிலிருந்து 24 கி.மி தூரம் திருத்துறைப்பூண்டியிலிருந்து ஒன்று இரண்டு கிலோமீட்டர்கள். மொத்த ஜனத்தொகை 2047 என்கிற சமீபத்திய புள்ளிவிவரம் ஐநூறு குடும்பங்கள் இருக்கலாம். அந்த கிராமத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்களுக்கு குலதெய்வமாக இருந்துவரும் தெய்வம் ஐய்யனார். இவரை தரிசிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. கிராமம் அழகு என்றால், கிராமத்து மனிதர்கள் அழகோ அழகு காண்பதற்கரிய தூய உள்ளம் கொண்ட மனிதர்கள். இயற்கைக்கே அழகு சேர்க்கும் எளிய மனிதர்கள்.

இந்தக் கட்டுரையில் நான் தெய்வத்தைப்பற்றிப் பேசப்போவதில்லை. தெய்வீகமான மனிதர்களைப் பற்றித்தான்.

திருவாரூரில், அதிகாலையில் ஸ்ரீ வான்மீகி நாதரையும் ஸ்ரீ கமலாம்பிகையையும், ஸ்ரீ தியாகராஜரையும் தரிசித்துவிட்டு, காரில் ஏறினோம் கரும்பல் நோக்கிச் செல்வதற்கு வழி முழுவதும் தனது பிறந்த ஊர் அருமை பெருமைகளை சொல்லிக்கொண்டே வந்தார் எங்களை அழைத்துச் சென்ற திருமதி. மீனா. தன்னுடைய அப்பா, தாத்தா பெருமைகளை சொல்லும் போது பரவசப்பட்டார். தன்னுடன் கூட்டிவந்திருந்த, அயல்நாட்டில் வசிக்கும் மீனா மாமியின் சகோதரன் வயிற்றுப் பேரன், பேத்தி, மற்றும் மருமகள் ஆகியோரிடம் தாங்கள் பிறந்து வளர்ந்த வீட்டை காண்பித்துவிடவேண்டும் என்ற ஆவலுடன், மிகவும் எளிமையான, பழமையான வீட்டுக்குள் சர்வ சகஜமக நுழைந்தார். இப்போது அந்த வீட்டை வாங்கி குடியிருந்த கிராமத்துக் குடும்பத்தினர், முன் அறிவிப்பு ஏதுமின்றி, திடீரென உட்புகுந்துவிட்ட எங்களை, மிகுந்த முக மலர்ச்சியோடு, வரவேற்று உபசரித்து, வீட்டை சுற்றிப் பார்க்க அனுமதித்தனர். குழந்தைகளும் ஏதோ உலக அதிசயத்தைப் பார்ப்பது போல் பார்த்தார்கள். தங்களுடைய கொள்ளுத்தாத்தாவின் வீட்டில் ஒரு சில நிமிடங்கள் இருக்கக் கிடைத்த பாக்கியத்தின்

முக்கியத்துவம் உணரும் வயது அவர்களுக்கு இல்லை. ஒருவேளை இப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் நாளை புரியவைக்குமோ என்னமோ.

போகும் வழியில் அம்மன் கோவில். அன்று ஆடி வெள்ளிக்கிமை வேறு. அர்ச்சகர் ஓடிவந்மு மீனா மாமியை அடையாளம் கண்டு, குடும்பப் பெருமைகளைப் பேசினார். மாமிக்குப் பாதங்கள் பூமியில் படரவில்லை! அதற்குள் மோட்டார் சைக்கிளில் ஒரு பெரியவர் வந்தார். அந்த கிராமத்தின் தெய்வீகமான மனிதர்களில் இவரும் ஒருவராகத்தான் இருக்கவேண்டும் என்பதை நான், அவர் பேசிய அன்பு ததும்பிய வார்த்தைகளிலிருந் தெரிந்து கொண்டேன். உண்மையிலேயே அவர் காட்டிய தூய அன்பு, என்னை வியக்கவைத்தது.

மீனா மாமியை பார்த்து, “வாங்கம்மா, நம்ம வீட்டு மெத்தை மாடி காலியாகத்தான் இருக்கு சாமி கும்பிட்டுவிட்டு, கொஞ்சநேரம் தங்கி சிரமப்பரிகாரம் செய்விட்டு, ஒரு வாய் காப்பி தண்ணி குடிச்சிட்டு போகலாம் என்றார். ஹோட்டலில் தங்கியது அறிந்து உரிமையுடன் கோபித்துக் கொண்டார். “எதுக்கு மாடிவீடு கட்டிபோட்டு வச்சிருக்கேன். நம்ம ஊரு மக்க யாரா இருந்தாலும், நேரா நம்ம வீட்டுக்குத்தான் வந்து தங்கி, அவங்கவங்க சாமியை கும்பிட்டுபோகணுங் கிறதுக்காகத்தானே கோபிச்சக்கப்படாது, நான் முஸ்லிமாக இருந்தாலும் நம்ம குடும்பங்கள் எல்லாம் ஒண்ணா படிச்சு, ஒண்ணா வளர்ந்து, ஊருக்குள்ள சந்தோஷமா இருந்தவங்க தானே. ஏதோ காலத்தின் கட்டாயம் நீங்கள்ளாம் ஊரை விட்டு போகும்படியா ஆயிடிச்சு. அதுக்காக நம்ம, மனசு விட்டுப் போயிடுமா என்ன? ஊருக்குள்ள நீங்க வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சதும் குலதெய்வம் கும்பிடத்தான் வந்திருப்பீங்கன்னு, உங்களை எப்பிடியம் பார்த்துடணும்னு வண்டிய விரட்டிகிட்டு வாறேன். “என்று வார்த்தைகளில் தேன் சொரிந்த அந்த இஸ்லாமியரின் இதயம் மிகவும் அழகாக இருந்தது. இப்படி எல்லோரும் இருந்துவிட்டால் இந்த தேசம் எப்படி இருக்கும் என்று என் மனம் நினைத்து என் கண்களில் நீர் கோர்த்தது. அந்த தெய்வீக மனிதர் அதனை கவனிக்கவும் செய்துவிட்டார்.




“இந்தப் புள்ளைகளுக்கு நீங்க தாய் வழி பாட்டியா? இது உங்க பொண்ணு. இப்ப எங்க ஊரு மருமக, சரியா நான் சொல்றது?“ என்றுவிட்டு கிராம மக்களுக்கே உரிய வாஞ்சை நிறைந்த கண்களால் என் பெண்ணைப் பார்த்து, “பெரிய படிப்பு படிச்சு, அயல் நாட்டுக்கு போயி, உத்தியோகமும் பார்த்துக் கொண்டு, பெரியவங்க துணை எதுவுமில்லாம, குடும்பம் நடத்துற குல வழக்கம் மறக்காம இந்த சின்ன கிராமத்தை தேடி வந்து குல சாமி கும்பிடுற. நல்லா இருப்பம்மா. குடும்பம் குழந்தைகளோட நல்லா இருப்பம்மா. எப்ப வந்தாலும் எங்களையெல்லாம் பார்த்துட்டு, எங்கவீட்டுல ஒருவாய் காபியாவவது குடிச்சிட்டுத்தான் போகணும்.’’ என்றதும் அதுவரையில் பட்டும் படாமலும் இருந்த என் பெண்ணின் கண்கள் குளமாயின.

“எம் பிள்ளைக்கு பூணல் போடப்போறோம். அதான் குலதெய்வத்தை தரிசிக்க வந்தோம். இவங்க என் புகுந்தவீட்டு அத்தை என்று மீனா மாமியை காண்பித்துப் பேசினாள்.

அந்த இஸ்லாமியப் பெரியவரின் கண்களும் தளும்பியது. தன் கையை என் பேரன் பூணல் பையன் சிரஸில் வைத்து, “இறைவன் உங்களை நல்லா வைப்பான். உங்கள் குல வழக்கத்தை விட்டுடாம கடைபிடிக்கணும.’’ என்று ஆசீர்வதித்தார். வாயார வாழ்த்திவிட்டு விடைபெற்று சென்றார்.


என்னைப் பொறுத்தவரையில் என் மகளின் குலதெய்வமே, நேரில் பிரத்தியட்சமாக, அவரின் ஸ்வரூபத்தில் வந்து ஆசீர்வதித்தது போல் இருந்தது. மதங்கள் மனிதநேயத்தில் குறிக்கிடவில்லை என்பது நிதர்சனம். மதங்கள் மனித நேயமுள்ள மனிதர்களை நிலைகுலையச் செய்வதுமில்லை. ஒற்றுமையை வளர்ப்போம். ஒன்று கூடி வாழ்வோம். இந்த தேசம் காப்போம்.



உ

ஸ்ரீ ராமஜெயம் : ஸ்ரீ குருப்யோ நம :

# வேத பாரதி



(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## முதலாம் ஆண்டு விழா அழைப்பிதழ்

மஹா ராஜ ராஜ ஸ்ரீ......................அவர்களுக்கு அநேக நமஸ்காரம் / ஆசீர்வாதங்கள். நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ, விகாரி வருஷம், ஐப்பசி மாதம், 3- ஆம் தேதி ஞாயிற்றுகிழமை (20-10-2019) அன்று **புதுவை வேதபாரதியின் முதலாம் ஆண்டு விழாவை குடும்பவிழாவாக** நடத்துவதாய், ஈஸ்வர அனுக்கிரஹத்துடனும், ஸ்ரீ காஞ்சி காம கோடி பிடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யாள் ஸ்வாமிகள் ஆசிகளுடனும், பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் பரிபூரண ஆசிகளுடனும், உத்தேசிக்கப்பட்டு மேற்படி வைபவமானது புதுவை ECR, **ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில்** காலை 8.00 மணிமுதல் மாலை 8.00 மணிவரை, நடைபெறும்.

நமது பிராம்மண சமூக ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் குடும்பசஹிதமாய், வந்திருந்து விழாவை சிறப்பிக்குமாறு கேட்டு கொள்கிறோம்.

**தேதி : 20. 10. 2019**

அலுவலகம், அனுஷம் ஹால், எண். 86, வெது மெயின்ரோடு,
மகாவீர் நகர், கருவடிக்குப்பம், புதுச்சேரி - 605 008.

இங்ஙனம்

**நிர்வாக குழு, வேத பாரதி புதுவை**



# வியக்க வைக்கும் எண்கள்

*கணிதம் என்பது ஒரு ஆழமான கடல். இந்த கணிதத்தின் அடிப்படை அம்பமே ஒன்றிலிருந்து ஒன்பது வரையுள்ள எண்கள்தான். எண்கள் வரிகையில் ஒன்று முதல் 100 வரை விரிவாக பார்ப்போம்.*

**எண் 108ன் சிறப்புக்கள்:**

*நமது வாழ்க்கையில் தினமும் நாம் பலவிதங்களில் 108 எண்ணைப் பயன்படுத்துகிறோம். சில உதாரணங்கள்*

1. *எல்லா கடவுள்களுக்கும் அர்ச்சனை செய்யும்போது அந்த கடவுளின் 108 நாமங்களைச் சொல்லி பூக்களால் அர்ச்சிக்கிறோம். (அஷ்டோத்ரம்)*
2. *நம்முடைய வேதத்தில் உள்ள உபநிஷத்துக்கள் 108*
3. *ஜபம் செய்யும்போது ஜப மாலையில் 108 மணிகள்தான் கோர்க்கப்படும்.*
4. *உடலில் 108 மர்ம ஸ்தானங்கள் உள்ளன என வர்மக்கலை கூறுகிறது.*
5. *சைவ, வைணவ திவ்ய க்ஷேத்திரங்கள் 108*
6. *நராஜரின் கரணங்கள் 108, தாளங்கள் 108*
7. *அரசமரத்தை வலம் வருவது 108 முறை*
8. *சூரியனின் விட்டம் பூமியின் விட்டத்தைப்போல் 108 மடங்கு*
9. *மனிதனின் ஆசைகளும் 108 விதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.*
10. *108 சக்தி நாடிகள் உடலில் பல்வேறு பாகங்களிலிருந்து இதய ஸ்தானத்தில் குவிவதாக தந்திர சாஸ்திரம் கூறுகிறது.*
11. *அவசர சேவைக்கு நாம் 108 ஐ தான் அழைக்கிறோம்.*
12. *ஜப்பானில் உள்ள ஜென் ஆலயங்களில் புத்தாண்டின் வரவை 10 முறை மணியை ஒலி எழுப்பி வரவேற்பார்கள்.*
13. *இஸ்லாத்தில் 108 எண் இறைவனைக் குறிக்கிறது.*
14. *சீக்கிய மதத்தில் 108 மணிகள் அடங்கிய மாலையே உபயோகப்படுத்தப்படுகிறது.*
15. *திபெத்திய புத்த சமயப் பிரிவில் பாவங்களின் எண்ணிக்கை 108.*

*இன்னும் ஏராளம்*

தொகுப்பு: ஆதித்யன்

# வேதாந்த ப்ரபோதம்

## குருவின் மேன்மை

பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிஜி அவர்கள் கடந்த ஜூலை 29ம் தேதி (ஸோம வர பிரதோஷத்தன்று) சித்தி அடைந்தது. அவரை அறிந்த பல பக்தர்களுக்கு வருத்தமா இருந்தாலும், ஒரு சந்நியாசியாக அவர் செய்த பல நற்தொண்டுகளை நாம் பெருமையுடனும், ஆச்சரியத்துடனும், பக்தியுடனும் பார்க்க வேண்டி இருக்குறது. நம் போன்ற ஒரு சிலர்களுக்கு கடந்த வருடம் 2018ல் (கடந்த ஜூலை-இல்) மயிலாப்பூர் ஸமஸ்க்ரித காலேஜ் அருகில் வேத பாரதி மூலம் நடத்த பெற்ற சுவாமிஜியின் வேதாந்த சொற்பொழிவை கேட்கும் பாக்கியம் கிடைத்தது.

வேதாந்தத்தை பற்றிய தீவிர சிந்தனை இல்லாத என் போன்ற சிலருக்கு அவர் எடுக்கும் முயற்சியும், அதுவும் அந்த வயதில் உடல் நலனையும் கருதாமல் அவரின் உழைப்பு மிக்க ஆச்சரியத்தை அளித்தது. இத்தனை கஷ்டம் அவர் யாருக்காக எடுக்கிறார். எதற்காக என் போன்ற ஒரு 20-30 பேருக்கு அவர் தினமும் வேதாந்த சொற்பொழிவு ஆற்ற நினைக்கிறார். அவரை இதை செய்ய சொல்லி யாரும் வபுறுத்தவில்லையே. இதனால் யாருக்கு பயன் என்ற கேள்வி முதலில் எழுந்தது.

மெல்ல மெல்ல அவரோடு சேர்ந்மு பழகிய அந்த நாட்களில், பொறுமையுடனும், அக்கறையுடனும் ஒரு குழந்தைக்கு சொல்வது போன்ற அவரின் கனிவான குணம் சில சமயம் உரிமையாக உறவினர் போல் செல்லமாக கடிந்து கொண்டு, பின்னர் திரும்பவும் புரிய வைக்க முற்படும் விடாமுயற்சி, எங்களை போன்றோரை பலமுறை பிரமிக்க செய்தன. சங்கரர் மீதும் வேதாந்த ஞானத்தின் மீது அலாதி பற்ற்று கொண்டிந்தார். அனைவரும் சங்கர பாஷ்யத்தை கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும் என்றும், சங்கர பாஷ்யத்தை மட்டுமே நமக்கு முன்னோடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் ஒரு வித பிடிமாதவாகவே இருந்தார். அதுவும் தற்போதைய காலங்களில் சங்கர பாஷ்யத்தை பல்வேறு கோணங்களில் விரிவுரை எழுதும் பெயரில் பலரும் தவறான கண்ணோட்டத்தை சித்தரிகை முற்படுவதில்



ஒரு வித வருத்தமும் கொண்டார். இதனை பல முறை என்னிடமும் அங்கே இருந்த பல பெயர்களுடனும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

வேதாந்த விசாரம் அனைவருக்கும் பொதுவானது என்றும் என்றும் அதனை சரியாக படிக்காவிடில், எளிதாக சொல்லாவிடில், அனைவருக்கும் அது ஒரு எட்டாக்கனி ஆகி விடும் என்று அவர் நினைத்தார். கடந்த வருடம் மயிலாப்பூரில் நடந்த சொற்பொழிவிலும் சரி, அதற்க்கு முன் அவர் பெயரில் யு-டியூபில் உள்ள பல விடீயோக்களிலும் சரி, திரும்ப திரும்ப வேதாந்தத்தில் அனைவருக்கும் - சரி எது, தவறு எது என்பதை எடுத்து உரைத்திருக்கிறார். இதுவே அவர் நமக்கும், நம்மை போன்ற பல பக்தர்களுக்கும் விட்டு சென்ற மிக பெரிய பொக்கிஷமாக நாம் கருதுகிறோம்.

ஒரு சந்நியாசியாக ஓரிடத்தில் உட்கார்ந்து கொள்ளாமல், தர்ம சம்ரக்ஷணைக்காக பல இடங்களுககு பிரயணாத்திருக்கிறார். காஷ்மீர் முதல் கேரளா வரை பல சொற்பொழிவுகளிலும், ஸதஸ்-இலும் அவர் பங்கேற்று இருக்கிறார். அறிஞர்களும், மருத்துவர்களும், நீதி யரசர்களும் இருக்கும் சபையில், தன கருத்துக்களையும் தர்மத்தை பற்றி சிந்தனையையும், தைரியமாகவும், எளிமையாகவும் உறைத்திருக்கிறார்.

எங்களுடன் பேசும்போது நிறைய பேர்களை சொற்பொழிவுக்கு கூட்டி கொண்டு வர சொல்லுவார். தர்ம சிந்தனை இல்லாமல் என் செய்வது என் அறியாமையில் இருக்கும் பலரின் தவிப்பையும், தர்மத்தை பற்றிய தவறான புரிதலால் ஏற்படும் குழப்பத்தில் இருக்கும் பலரையும் அவர் நன்றாக புரிந்து கொண்டிருந்தார். அப்பேற்பட்டவர்களுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு உதவ வேண்டும் என்று பாடுபட்டார். இவை எல்லாம் பற்றி அவரிடம் கேட்கும் போது, அவரை நேரில் பார்க்கும் போதும், அந்த முதிய வயல், கடும் உடல் நலக்குறைவுக்கு இடையில், அவர் எடுத்து கொண்டிருக்கும் முயற்சிக்கு அர்த்தம் புரிய தொடங்கியது. பல முறை அந்த சொற்பொழிவின் பொது என் போன்றோர்களுக்கு நெகிழ்ந்து போய் கண்கள் குளமாகும் அனுபவங்களும் ஏற்பட்டன. அப்பேர்பட்ட மகானுக்கு நாம் செய்ய வேண்டிய ஒரே கடமை, தர்ம சிந்தனையை கொஞ்சம் கொஞ்சமாக உள்வாங்கி கொள்ள வேண்டும் என்பதும்,

அதற்கான வாழ்க்கை முறையை உண்டாக்க பிரயத்தன படி வேண்டியதுமென்தான்.

இனி வரப்போகும் தலைமுறைக்கு குறிப்பாக 20 வயதுக்கு மேற்பட்ட எல்லா இளைஞர்களுக்கும் மெல்ல மெல்ல வேதாந்தத்தை கொண்டு செல்ல, பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதியின், எழுத்துக்களும் சொற்களும் நமக்கு மிக பெரிய அடித்தளமாக அமைய போகின்றன.

அவர் அனுமதி பெற்று, அவருடன் இருந்த அந்த ஒரு மாதத்தில், நாங்கள் புரிந்துகொண்ட சில விஷயங்களை ஆங்கிலத்தில் எழுதி பின்னர் தமிழில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். பெருமையுடனும், கண்ணீருடனும் குருவின் பொற்பாதங்களுக்கு சமர்ப்பணம்.

நமஸ்காரங்களுடன்

**ஸ்ரீகணேஷ்**, மந்தைவெளி



## தனக்கென வாழோம்
## பிறர்க்கென வாழ்வோம் - இதுவே பிறப்புரிமை

*- மஹா ஸ்வாமிகள்*

**பயன் எண்ணாமல் உழைக்கச் சொன்னான்**

**பக்தி செய்து பிழைக்கச் சொன்னான் - பாரதி**

வேதபாரதி அமைப்பு பெற்ற பெரும்பேறு நித்ய அனுஷ்டானங்கள் செய்யும் நிர்வாகிகளும், தொண்டுள்ளம் கொண்ட நல்உள்ளங்களும் சேர்ந்து வேதபாரதியின் நோக்கத்திற்காக தொடர்ந்து பயணம் செய்து வருவதுதான். ஏனெனில் வேதபாரதியின் நோக்கம் மிகப்புனிதமானது. நாம் வாழ்ந்த குடும்ப அமைப்பு முறை வாழ்க்கையும், அறநெறிகளும், அனுஷ்டானங்களும் அடுத்து தலைமுறைக்கு எடுத்துச் சொல்வது தான். அதன் ஒரு பகுதியாக நம் வேதபாரதி ஆதரவாளர்களுக்கும் அன்பர்களுக்கும் பிரதி மாதம் செயல்பாடுகள் குறித்த அறிவிப்பும், விஷேஷங்கள், பண்புகள் குறித்த விளக்கங்களும் வழங்க வேதபாரதி செய்திகள் மாதப் பத்திரிகை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டு அதற்கான அரசு அனுமதியும் பெற்று கடந்த ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தன்னலம் பாராமல் உழைத்து வரும் வேதபாரதி செய்திகள் குழுவினர்கள், கட்டுரையாளர்கள், வாசகர்கள், டைப்செட் அச்சடித்தல், விளம்பரதாரர்கள் எல்லோருக்கும் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ பிரார்த்திக்கிறோம்.

இப்பணி மிகக்கடுமையானது. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாட்களுக்குள் கண்டிப்பாக அஞ்சல் செய்ய வேண்டிய கட்டாயம். புத்தகக்குழு பொறுப்பாளர் ஸ்ரீ டி.சூர்யநாராயணன் மாமா ஒருங்கிணைந்து கடந்த 5 ஆண்டுகளாக தொடர்ந்து செய்து வந்த இந்த புனிதப்பணி போற்றுதலுக்குறியது.

வேதபாரதி குழுவினர் சார்பில் மனமார்ந்த பாராட்டுகளும், வாழ்த்துகளும்.

என்றும் அன்புடன்.

செயலாளர்

செல்வன். கே.நாராயணசர்மா,



## நம்பிக்கை தரும் நங்கநல்லூர்



நங்கநல்லூர் அக்ஷயா மஹாலில் நடைபெற உள்ள ஸ்ரீ ரமண பாரதி சொற்பொழிவு செப் 26, 27, 28ல் நடைபெறுவதை முன்னிட்டும், மக்கள் தொடர்பு முகாம் செப் 17 முதல் செப் 22 முடிய மாலை நேரங்களில் "வீடுகள்தோறும் வேதபாரதி'' சந்திப்பு நடைபெற்றது. நங்கநல்லூர் ஸ்ரீ சங்கர், ஸ்ரீ சுப்ரமணியன், ஸ்ரீராம், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, ரங்கராஜன், பத்மநாபன், ஸ்ரீ நாராயணன், லோகேஸ்வரன் கலந்து கொண்டு 200 குடும்பங்களை சந்தித்து வேதபாரதி குறிக்கோள்களை கொண்டு சேர்ந்தனர். அப்போது சென்ற ஆண்டு ஸந்த்யா வந்தண போட்டியில் முதல் பரிசு பெற்ற செல்வன். கே.நாராயணசர்மா, நித்ய அனுஷ்டானங்கள் சரியாக செய்வதுடன் ஸமிதா தானம் முறையாக செய்வதாக பெற்றோர்கள் தெரிவித்தார்கள். வேதபாரதி குழுவினரை உபசரித்தார்கள். வேத பாரதியின் மனமார்ந்த பாராட்டுகள் இந்த ஆண்டு 25.12.2019 மாலை 3.00 மணி முதல் நெமிலிச்சேரி ஸ்ரீ சிவா பாடசாலையில் ஸந்த்யா வந்தன போட்டி நடைபெற உள்ளது.


உ

குருவே சரணம்

**வேதபாரதி**

**அந்தண சிறுவர், சிறுமிகளுக்கான**

**ஸந்த்யா வந்தன போட்டி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சி**

**நாள்** : 25.12.2019, புதன்கிழமை **நேரம்** : காலை 9.00 மணி

**இடம்:** வேதவியாச குருகுலம், நெமிலிச்சேரி

**நிகழ்ச்சி நிரல் :**

1. உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள் கலந்து கொள்ளலாம்.
2. எல்லா ஸாகைகளுக்கும் வேத விற்பன்னர்கள் பரிட்சை செய்வார்கள்.
3. முன்பதிவு கடைசி நாள் : 10.12.2019, முன்பதிவு செய்ய வேண்டிய கைபேசி எண் : 9443495950
4. பிரசாத உணவு, சான்றிதழ், பரிசுப்பொருட்கள், சிறப்பு பரிசுகள் உண்டு.
5. பெண் குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை, குடும்ப நலன், மேற்கல்வி குறித்த யுவஸ்ரீ வகுப்புகள் நடைபெறும்.

மேலும் தொடர்புக்கு :

**9443495950 / 9551923310 / 8838938440**




# Yuvasri Committee Meeting on 21.09.2019

Yuvasri meeting was conducted on 21st september, saturday 2019 at.101, kottur manor, 4th main road extn. Kotturpuram.Chennai.Members Present:-1.Sri.Venkatraman ji
2.Yoga.Chandrasekar ji
3.Dr.Shyamala Swaminathan
4. Shankar ji
5. Rangarajan ji
6. Advocate Kannan ji
7.Smt. Usha Ramesh
8. Smt. Aishwarya Arvindh
9. Sowbhagya Ramesh ji.

Minutes of the meeting.
-1. Accounts details of Thiruppur Yuvasri was submitted to the members by sri.venkatramanji.2. General discussions, views regarding Yuvasri programmes so for conducted were exchnged by members.3. 15 no.of yuvsri faculties listed for future communication. (List will be ciculated to members.) 4. 12 No.of Organisers /Volunteers Listed for future convenience. (List will be provided to members) 5. Responsibilities like arranging Yuvasri programes, arranging logistics for faculties, arranging accomodation, food and bewarages , writeups on events, photo and.video, etc.were allotted to organisers/voluntees.(List will be provided)6. It is decided to have Exclusive whatsapp group for Yuvasri members for easy reach. 7. It is decided to conduct 2 days compulsory faculty traing program as early as possible. It is also decided not to introduce any fresher without undergoing the training programe to the yuvasri classes.8. Forthcoming yuvasri classes are listed. (6 programs in various institution) Dates will be decided with the consultation of concerened authorities.9. The meeting came to an end with Shanthi manthram.

Unhesitatingly, it was a grand finale for nearly 2 months long strenuous efforts put by all Avvai Vizha committee members. All of them, met for half a dozen times periodically, to formulate various actions from mobilising participating schools for their student competitors for 8 disciplines from III to IX & Oratorical (650 students), soliciting various schools for their teachers as Judges (40 officially)for today's event, arranging Milk & Biscuits, Tea for Parents,Food for all students & parents (up to 1300), awarding the winners of the competitions with prizes of valued Books & Shields, honouring of Judges with some Utility items etc. It was indeed a mind boggling event of financial commitments, with like minded Donors chipping with their mites in Cash & Kind. Totally a cherishable moment in Veda Bharthi's Calendar of Programmes. Happy that young talents were identified for their commitments in the preparations for stage events, at Prizing ceremony. The new committee members(lady) from SSV TBM, were stupendous in their involvements, from monitoring the progress of different class room competitions, assisting in the process of identifying the winners, compering the events in the Stage and other related works. It is truly remarkable for the School management as a co-sponcerer of today's competitions to arrange for valued Books as prizes for winners and other needed facilities for the smooth conduct of the event. Veda Bharathi whole heartedly expresses its profound thanks to Sri LG, for allowing his precious time to give a thought provoking address to the assemblage. Veda Bharathi felt the blessings of Mathustree Prema Krishnamoorthy Sastrigal for her Asirvadams to the gathering and grateful to the short speech by the Guest Sri Kumara Raja, of Thirukovil Federation.On the whole, the conduct of the programme was well appreciated by the audience & the Teacher Judges from various schools.

**A S Narayanan.**



**G. SIVAGAMASUNDARI**
**99940 89133**



**N. GURUMURTHY**
**99940 89140**

# SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



**14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.**

# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **26.09.2019 வியாழக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**01.09.2019, ஞாயிற்றுக்கிழமை**

அரசூர் (வழி பொன்னேரி) கிராமத்தில் அமைந்துள்ள

**அருள்மிகு சௌந்தரவல்லி அம்பாள் உடனுறை**

**திருவாலீஸ்வரர் திருக்கோயிலில்**